**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 85 of 2017
Deposition of D.W. 2
Name of the Witness: திருமதி.பூங்கொடி
Date : 09.02.2026

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கை நாங்கள் தான் போட்டோம். எங்களுக்கு சேர வேண்டிய பாகத்தை என் அம்மா எழுதி வைத்துவிட்டார். அதை அவர்கள் கேட்கிறார்கள், அது எங்களுக்கு தான் சேர வேண்டும் என்று வழக்கு போட்டுள்ளோம். இந்த வழக்கில் நான் எதுவும் பதிலுரை தாக்கல் செய்யவில்லை. என் அம்மா தான் தாக்கல் செய்துள்ளார். என் அம்மா பதிலுரையில் என்ன விவரங்கள் சொல்லியுள்ளார் என்று தெரியாது. என் அம்மா இந்த வழக்கை வாதிகளின் உரிமையை மறுத்து வழக்கு நடத்தி வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. ஆதியின் எனது தாத்தாவின் அண்ணாவின் சொத்து. என் தாத்தாவின் அண்ணாவிற்கு குழந்தைகள் இல்லை என்பதாலும், என் அப்பா இறந்து விட்டதால் என் அம்மா நிர்கதியாய் இருந்ததால் சொத்துக்களை என் அம்மாவிற்கு கொடுத்து விட்டார். எத்தனை பத்திரங்களாக கொடுத்தார் என்று தெரியாது. என் தாத்தாவிற்கு இரண்டு மனைவிகள். என் தாத்தா ராஜகோபாலுக்கு முதல் மனைவி மூலமாக 4 பிள்ளைகள் அவர்கள் பெயர் கிருஷ்ணராஜ், சாம்ராஜ், ராஜன், யுவராஜ். இரண்டாவது மனைவி மூலமாக 4 பிள்ளைகளும் பிறந்தன. என் தாத்தா ராஜகோபாலின் அப்பா பெயர் தெரியாது.

*(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)*

Sd/Tmt.U.Monica, M.L.
Additional District Judge,
Dharmapuri.